பொத்துவில் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 4,622,148 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| நூலக புத்தகங்கள் | 74,456 | நூலகப்புத்தக பதிவேடு |

1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிகள் - 2006 இன் பிரிவு 5.4.12 | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி தொடர்பான விபரங்கள், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 2,581,477 பெறுமதியான பெறுமதிசேர் வரி தொடர்பான விபரம் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 2,192,000 மொத்தப் பெறுமதியான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 94 வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (இ) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான மெய்யாய்வுச்சபை அறிக்கையானது 2017 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 7,062,954 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 15,846,919 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 8,783,965 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 656 வர்த்தக நிலையங்கள் மற்றும் 9,983 வீடுகள் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 5,319,500 தொகையான வருமானம் இழக்கப்பட்டுவருகின்றது.

#### 2.2.2 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 இன் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 40 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 208,200 தொகையான உரிமைக் கட்டணத்தை 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 இறைச்சிக் கடைக் குத்தகை அறவீடு

1992 முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிலுவையாகவுள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணமாகிய ரூபா. 1,676,063 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 மாட்டுத் தோல் விற்பனை வருமானம்

சபையின் கொல்களத்தில் இறைச்சிக்காக வருடாந்தம் அண்ணளவாக 3,600 மாடுகள் அறுவை செய்யப்படுகின்ற போதிலும் அம் மாடுகள் தொடர்பில் அறுவைக் கட்டடணம் அறவிடல் மற்றும் அதன் தோல்களை தோல் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால்

சபையானது வருடாந்தம் அண்ணளவாக ரூபா 900,000 தொகையான வருமானத்தை இழந்துவருகின்றது.

2.2.5 கடை வாடகை அறவீடு

1995 முதல் 2005 ஆம் ஆண்டு வரை நிலுவையாக காணப்பட்ட கடை வாடகை ரூபா 32,667 தொகையினை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 விடுதி வரி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 117 சுற்றுலா விடுதிகளின் வருமானத்தில் 01% இனை வரியாக அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் செயற்திட்டங்களிடமிருந்து சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 7 வாகனங்கள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றின் உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையின் சிபாரிசின்படி பற்றாக்குறையாகவுள்ள 15 வகையான 156 இருப்புப் பொருட்கள், அழிக்கப்படவேண்டிய 2,000 நூல்நிலையப் புத்தகங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட வேண்டிய 144 நூல்நிலைய புத்தகங்கள் தொடர்பில் 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

3.2.1 உள்ளக வீதிகளுக்கு கிறவல் இடல்

2015 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்து உள்ளக வீதிகளுக்கு கிறவல் இடுவது தொடர்பில் 2016 ஆம் ஆண்டு 440 கியூப் கிறவல்களிற்கு ரூபா 1,100,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வேலை மேற்பார்வையாளர் ஆகியோரின் எழுத்து மூலமான உறுதிப்படுத்தலின்படி அவ்வீதிகளுக்கு 297 கியூப் கிறவல் மாத்திரமே இடப்பட்டதாக தெரிவித்துள்ளனர். இதன்படி ரூபா 357,500 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபையில் கடமை புரிந்த 04 ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 48,554 கடன்

தவணைப்பணம் 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரை கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பை வழங்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டு உலக தரிசன நிறுவனத்தின் ரூபா 1,231,600 நிதியையும் 2011 ஆம் ஆண்டு சபையின் ரூபா 1,612,127 நிதியையும் பயன்படுத்தி காகித மீள்சுழற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், இன்று வரை பயன்படுத்தப்படாமையால் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றது.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 7 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா 396,758 ஆனது 4 தொடக்கம் 16 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. இந்நிலுவைத் தொகையினை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
---------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |